# மான்மின் செய்திகள்

# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com


# தவிர்க்கமுடியாத இயற்கை பேரழிவுகளுக்கு முன்பு உங்களால் என்ன செய்ய முடியும்?

## கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசிகள் நிலநடுக்கம், சூறாவளி, மற்றும் வெள்ளத்திலிருந்து பாதுகாக்கப்படுகிறார்கள்



நேபாளத்தில் நிகழ்ந்த பெரிய நிலநடுக்கம் ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வாதாரங்களை கேள்விக்குறியாக்கியது. அவ்விடத்தில் இனி எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் இருக்கவும், மக்கள் துரிதமாக அதிர்ச்சியிலிருந்து மீண்டுவரவும் நாம் ஜெபித்துக் கொள்வோம். கூடுதலாக, தேவனால் எப்பொழுதும் பாதுகாக்கப்பட்டு, அவருக்கு மகிமை செலுத்துகிற அவருடைய ஆசீர்வாதத்தின் பிள்ளைகளாக நாம் மாறுவோம்.

ஏப்ரல் 25, 2015 அன்று நேபாளத்தின் தலைநகர் காத்மாண்டுவிற்கு அருகாமையிலுள்ள இடங்களை சக்திவாய்ந்த (7.8) நிலநடுக்கமானது தாக்கியது. அநேக கட்டிடங்கள் நொறுங்கின, இந்த முக்கிய நிகழ்வின் அதிர்ச்சியானது மற்ற இடங்களில் வாழ்கின்ற மக்களுக்கு அச்சுறுத்தலானது. இந்த நிலநடுக்கத்தின் பேரழிவில் ஏறக்குறை 7,000 மக்கள் இறந்தனர், மேலும் 15,000க்கும் மேலானோர் பாதிப்படைந்தனர் (மே 6, 2015 அன்றைய நிலவரத்தின்படி).

ஏப்ரல் 26, 2015 அன்று நேபாளத்தில் உள்ள மான்மின் பணித்தள மையத்தின் போதகர் கிரேஸ் லீ அவர்கள் தன்னுடைய திருச்சபையின் நிலையைக் கூறித்து கூறியதாவது, “எங்கள் சபைக்கு எவ்வித சேதமும், விசுவாசிகளுக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை. மற்ற பகுதிகளில் இருக்கும் அவர்கள் குடும்ப அங்கத்தினர்களும், அவர்களுடைய வீடுகளும்கூட பாதுகாக்கப்பட்டது. சபைக்கு எந்த ஒரு சேதமும் உண்டாகவில்லை!”

மான்மின் பணித்தள மையமானது, காத்மாண்டு மாவட்டத்துடன் பாலத்தினால் இணைக்கப்பட்ட லலீத்பூர் மாவட்டத்தில் ஒரு உயரமான, இலேசான ஐந்து மாடி கட்டிடத்தின் மூன்று முதல் ஐந்தாவது தளம்வரை உள்ள இடத்தைப் பயன்படுத்தி கொண்டு வருகிறது. நிலநடுக்கம் தாக்கிய சமயத்தில் அந்த கட்டிடம் வெகுவாக அசைந்ததால், அவர்களால் எதையாவது பிடித்துக்கொள்ளாமல் நிற்கவோ உட்காரவோ முடியவில்லை.

அவர்கள் சனிக்கிழமையை கர்த்தருடைய நாளாக ஆசரிப்பதால், அந்த நேரத்தில் அங்கு இருந்த 170க்கும் மேற்பட்ட அங்கத்தினர்கள் ஞாயிறு காலை ஆராதனையை முடித்த பிறகு மதிய உணவை சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் அதிர்வை உணர்ந்தபோது சிறிது நேரத்திற்கு சாலையில் சென்று நின்றனர். ஏறக்குறைய ஒருமணி நேரத்திற்கு பிறகு அவர்கள் மீண்டும் சபையில் ஒன்றாய் கூடி மாலை ஆராதனைக்குப் பதிலாக ஜெபக்கூட்டத்தை நடத்தினர்; அவர்கள் தானியேல் ஜெபக்கூட்டத்திலும்கூட பங்கு பெற்றார்கள்.

போதகர் கிரேஸ் அனுப்பிய கடிதத்தில், “எங்கள் அங்கத்தினர்கள் இந்த முக்கிய நிலநடுக்கத்தில் பாதுகாக்கப்பட்டதால் தங்களுடைய விசுவாசத்தில் வளரநேர்ந்தது. நேபாள அரசாங்கம் பாதிப்பிலிருந்து துரிதமாக மீண்டு வரவும், இந்நாடானது பின் விளைவுகளிலிருந்து பாதுகாக்கப்படவும் தயவாய் ஜெபித்துக் கொள்ளுங்கள்” என்று குறிப்பிட்டிருந்தார்.

இயற்கை பேரழிவுகளை சந்திக்கையில் அதை தாங்கக்கூடாத சிறியவர்களாய் மனிதர்கள் இருக்கின்றனர். எனினும், அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாய் அவரை விசுவாசித்து, அவர்மீதான அன்போடு அவருடைய வார்த்தையை கைக்கொண்டு, வெளிச்சத்தில் நடந்தால், அவர்கள் சமாதானத்தை இழக்கமாட்டார்கள். எகிப்து தேசம் முழுவதும் உண்டான பத்துவாதைகளிலிருந்து கோசேன் நாட்டில் வாழ்ந்த இஸ்ரவேலர்களை தேவன் பாதுகாத்ததுபோல, அவர் தம்முடைய வல்லமையான பாதுகாப்பின் கிரியைகளை இன்றும்கூட மக்கள் அனுபவிக்க அனுமதித்துள்ளார்.

ஜூலை 15, 2014 அன்று, இதைப் போன்ற ஒரு சம்பவம் பிலிப்பைன்ஸில் இரவு நேரத்தில் நடந்தது. ராமசன் என்னும் சூறாவளி மணிக்கு 250கி.மீ வேகத்தில் சுழல் காற்றை வீசச் செய்து பிலிப்பைன்ஸ் நாடுமுழுவதிலும் பேரழிவை ஏற்படுத்திய ஒரு சக்திவாய்ந்த வெப்பமண்டல புயலாகும். கேவைட் மான்மின் சபையில், கட்டிடத்தின் மேற்தளத்தோடு இணைக்கப்பட்டிருந்த தூணானது பலத்த புயல் காற்றின் நிமித்தம் அதிர்ந்தது. போதகர் ஷேரன் சோ அவர்கள் அறிவர்.லீ அவர்களை அவசரமாக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டார். திடீரென்று, தூணை முற்றிலும் சாய்க்கும்படி வீசிக்கொண்டிருந்த புயலானது செயலிழந்துபோனது, மழையும் நின்றது.

அடுத்த நாள் காலையில், போதகர் சோ தன் சபைக்கு அருகில் நூற்றுக்கும் அதிகமான மரங்கள் வேரோடு சாய்ந்திருப்பதை கண்டார்கள். அது பார்வைக்கு ஒழுங்கற்றிருந்தது. மேலும் அவர்கள் சபைக்கு எதிரேயிருந்த எரிவாயு நிலையத்தில் இருந்த ஒரு இரும்பு தூண் வளைந்திருப்பதையும் கண்டார்கள். ஆனால் அவர்களுடைய சபையில், மேற்கூரை மற்றும் வாகனம் நிறுத்தும் இடத்தின் சுவற்றில் ஏற்பட்ட மிகச் சிறிய பாதிப்பை தவிர வேறு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

மார்ச் 2011ல், ஜப்பானிலுள்ள செண்டாய் என்ற இடத்தில் சுனாமி தாக்கியதில் கடலோர பட்டணங்கள் இழுக்கப்பட்டு, மிகக் கடுமையான நிலச்சரிவுகள் ஏற்பட்டன. ஆயிரக்கணக்கான மக்கள் உயிரோடே புதைந்தனர். கூடுதலாக, அது புகுஷிமா டெய்ச்சி அணு உலையில் ஏற்படுத்திய பாதிப்பால் கதிர்வீச்சானது கசிய தொடங்கியது. அதனால் உண்டான பாதிப்பு அளவிட முடியாதது. இப்பேற்பட்ட இடர்பாட்டில், ஜப்பானில் இருந்த மான்மின் மத்திய திருச்சபையின் கிளைசபைகளுக்கு சம்பவித்தது என்ன?

யமகடா மான்மின் சபையானது செண்டாய்–க்கு மிக அருகாமையிலிருந்தும், எவ்வித பாதிப்பும் அவர்களுக்கு உண்டாகவில்லை. அவர்கள் கட்டிடம் அசைந்ததையும், மின்சார துண்டிப்பையும் மாத்திரமே அனுபவித்தனர். மற்ற கிளை சபைகளும் கட்டிடம் அசைந்ததை மாத்திரம் உணர்ந்தவர்களாய் அவர்கள் அனைவரும் பாதுகாக்கப்பட்டார்கள்.

ஜனவரி 2011ல், ஆஸ்திரேலியாவில் உள்ள குயின்ஸ்லேண்டில் ஒரு தொடர்ச்சியான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. பிரிஸ்பேன் ஆறு எட்டு மீட்டர் அளவிற்கு உயர்ந்தது. வானிலை ஆய்வாளர்கள் கணிப்பின்படி தொடர்ச்சியாக மழை பெய்தால், ஆயிரக்கணக்கான வீடுகள் மூழ்கிவிடும் வாய்ப்பு இருந்தது. ஆஸ்திரேலிய WCDN-னின் இயக்குனர் மருத்துவர். மிகா கூப்பர் அவளுடைய தேசத்திற்காக ஜெபிக்கும்படியாக அறிவர். லீ அவர்களை கேட்டுக் கொண்டார்கள். அதன்பிறகு, சீக்கிரத்திலே மழை நின்றது; பெரிதான சேதமானது தவிர்க்கப்பட்டது.

மக்கள் எந்த இடத்தில் இருந்தாலும், எதிர்பாராத பேரழிவுகள் ஏற்படுமானால், அந்த இக்கட்டிலே அவர்கள் பாதுகாப்பற்றுதான் இருக்கமுடியும். அன்பின் தேவன் மனுக்குலம் பேரழிவுகளை சந்திக்க வேண்டும் என்று விரும்பவில்லை. மக்கள் பரலோகத்திற்கான நம்பிக்கையோடுகூட ஆரோக்கியமான, சந்தோஷமான வாழ்க்கையை வாழவேண்டும் என்றே அவர் விரும்புகிறார். பெற்றோர்களின் அன்பைக் காட்டிலும் மிக பெரிதான அன்போடுகூட அவர்களை அவர் பாதுகாக்கிறார். ஆனால் தேவன் தம்முடைய முகத்தை திருப்பிவிடும் அளவிற்கு மனிதர்கள் வேண்டுமென்றே பாவங்களை செய்து கொண்டிருந்தால், நியாயத்தின்படி பேரழிவுகள் நடைபெறும்.

ஒருவேளை மனிதர்கள் இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராய் ஏற்றுக்கொண்டு தேவனுடைய வார்த்தையின்படி வாழ முயற்சித்து, தேவனுடைய பிள்ளைகளாய் கர்த்தருடைய நாளை கைக்கொண்டு, முழு தசமபாகத்தை கொடுத்து ஒரு குறைந்தபட்ச நீதியின் அளவை நிறைவேற்றும்போது, அவர்கள் கவலைகள், வருத்தங்கள், விபத்துக்கள் மற்றும் பேரழிவுகளிலிருந்து பாதுகாக்கப்படுவார்கள்.

நேபாளத்தில் நிகழ்ந்த பெரிதான நிலநடுக்கம் ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வாதாரங்களை கேள்விக்குறியாக்கியது. அவ்விடத்தில் இனி எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் இருக்கவும், மக்கள் துரிதமாக அதிர்ச்சியிலிருந்து மீண்டுவரவும் நாம் ஜெபித்துக் கொள்வோம். கூடுதலாக, தேவனால் எப்பொழுதும் பாதுகாக்கப்பட்டு, அவருக்கு மகிமை செலுத்துகிற அவருடைய ஆசீர்வாதத்தின் பிள்ளைகளாக நாம் மாறுவோம்.



தலைமை போதகர். அறிவர். ஜேராக் லீ

# நீங்கள் ஜலத்தினாலும் ஆவியினாலும் மறுபடியும் பிறக்க வேண்டும்

"இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 3:5)

•••

தன்னுடைய சுய பெலத்தால் அல்லது மன வலிமையால் யாராலும் இரட்சிக்கப்பட முடியாது. அதனால், தேவன் காலங்களுக்கு முன்னே அநாதி திட்டத்தை நிர்ணயித்திருந்தார். அந்தத் திட்டத்தின்மூலம் நமக்காக இரட்சிப்பின் வழியை திறப்பதற்காக இயேசு மரச் சிலுவையில் தொங்கினார்.

நாம் அதை விசுவாசிக்கும்போது, நாம் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்கமுடியும். அதன்பின் நாம் இரட்சிப்பையும், நித்திய ஜீவனையும் பரலோகத்தையும் பெற முடியும். ஜலத்தினாலும் ஆவியினாலும் மறுபடியும் பிறத்தல் என்பதின் ஆவிக்குரிய அர்த்தத்தை நாம் ஆராய்வோம்.

## 1. இயேசுவுக்கும் நிக்கொதேமுவுக்கும் இடையிலான ஆவிக்குரிய சம்பாஷணை

யோவான் 3:1 க்கு பின் வரும் வசனங்கள் யூதருக்குள் அதிகாரியான நிக்கொதேமு இயேசுவிடம் வந்த காட்சியை சித்தரிக்கிறது. நிக்கொதேமு நியாயப்பிரமாணத்தை மிகவும் நன்கு அறிந்த ஒரு போதகனாயிருந்தான். இயேசுவை எதிர்த்து கொலை செய்ய முயற்சித்த மற்ற பரிசேயர்களைப் போல அல்லாமல், நிக்கொதேமு சத்தியத்திற்காக தாகம் கொண்டு ஆவிக்குரிய காரியங்களைக் குறித்து சம்பாஷிக்கும்படி இயேசுவிடம் வந்தான்.

நிக்கொதேமு இயேசுவினிடத்தில் வந்து: "ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்ய மாட்டான்" என்றான். பின் இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்றார். நாம் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால், நாம் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது. நாம் எத்தனை அறிவாளிகளாக அல்லது ஐசுவரியவான்களாக இருந்தாலும் ஒரு பொருட்டல்ல அல்லது சபையில் நமக்கு எப்பேற்பட்ட பதவிகள் இருந்தாலும் பொருட்டல்ல.

நிக்கொதேமுவால் இயேசு கூறியவற்றை புரிந்துகொள்ள முடியவில்லை. நிக்கொதேமு இருந்ததுபோல நீண்ட காலம் திருச்சபையில் பங்குபெற்ற அங்கத்தினர்கள், சபையில் பதவிகள் வைத்திருப்பவர்கள், போதகர்கள் நடுவிலும்கூட அவர்கள் ஆவிக்குரிய புரிந்துக் கொள்ளுதலைப் பெறாத பட்சத்தில், அவர்களால் தேவனுடைய வார்த்தையைப் புரிந்துக் கொள்ள முடியாது.

1 கொரிந்தியர் 4:20ல் வாசிக்கிறோம், "தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது." அதாவது, நாம் தேவனுடைய வல்லமையின் மூலமாக மட்டுமே நாம் ஆவிக்குரிய இரகசியங்களை உணரவும் தேவனுடைய சித்தத்தைப் புரிந்துக்கொள்ளவும் முடியும்.

யோவான் 3:4ல் நிக்கொதேமு இயேசுவிடம், "ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ?" என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டுமென்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம்."

இயேசு ஒரு மனிதன் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு, அவனுடைய காணக்கூடிய சரீரம் அல்ல, காணக்கூடாத அவனுடைய ஆவியே மறுபடியும் பிறக்கவேண்டும் என்று கூறி கொண்டிருந்தார். முதல் மனிதனாகிய ஆதாம் ஜீவ ஆத்துமாவாக சிருஷ்டிக்கப்பட்டான். ஆனால் பாவத்தில் அவனது வீழ்ச்சியின் விளைவாக அவனது ஆவி மரித்தது. அதிலிருந்து ஆதாமின் சந்ததியினர் தங்களது ஆவிகள் மரித்திருப்பதோடு பிறந்தனர். மனுக்குலம் அனைத்தும் மாம்சத்திற்குரிய மனிதர்களாயினர். அதனால் அவர்கள் வேறு வழியில்லாமல் மரணத்தின் வழியாம் நரகத்திற்குள் விழ வேண்டியதாயிற்று.

ஒரு மனிதன் பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கு, இந்த "மரித்த ஆவி" உயிர்ப்பிக்கப்பட வேண்டும். அது ஜலத்தினாலும் ஆவியினாலும் செய்யப்படுகிறது. இயேசு இந்த சத்தியத்தை காற்றுக்கு சம்பந்தப்படுத்தினார். "காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது. அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினாலே பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான்" என்றார். நம்மால் காற்றின் சத்தத்தைக் கேட்க முடியும், ஆனால் அதை நாம் பார்க்க முடியாது. அது எங்கிருந்து வருகிறதென்றும் எங்கு முடிவடைகிறதென்றும் நாம் அறியோம். அதே போல ஆவிக்குரிய உலகத்தை மாம்சீக வரம்புகளுக்குள் விளங்கிக்கொள்ள முடியாது. ஆனால் தேவனுடைய கிரியையாலும் ஆவிக்குரிய வல்லமையாலும் மட்டுமே அதை புரிந்துக்கொள்ள முடியும்.

நிக்கொதேமுவைக் குறித்துப் பிற்பாடு வரும் பதிவுகளை நாம் பார்த்தால், அவர் இறுதியாக இரட்சிப்பைப் பெற்றார் என்பதை நாம் பார்க்க முடியும். உதாரணமாக யோவான் 7:50–51ல் அவர் கோபம் நிறைந்த பரிசேயர்களுக்கு முன்பாக இயேசுவுக்காக பேசினார். மேலும், இயேசு சிலுவையிலே மரித்த பின்னர், அவர் வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்து இரவிலே அவரிடத்தில் வந்தார் (யோவான் 19:39).

## 2. ஜலத்தினால் மறுபடியும் பிறத்தல் என்பதின் ஆவிக்குரிய அர்த்தம்

யோவான் 4:14ல் இயேசு, "நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிய நீரூற்றாயிருக்கும்" என்றார். நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்று எது? அதாவது, இயேசு கொடுக்கிற தண்ணீர் என்ன?

யோவான் 6:53ல் சொல்லப்பட்டபடி, மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசித்து அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாவிட்டால் நமக்கு நித்திய ஜீவன் இல்லை. மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசிப்பது என்பது தேவனுடைய வார்த்தையை நம்முடைய இருதயத்தில் வைப்பதாகும். அவருடைய இரத்தத்தில் பானம்பண்ணுதல் என்பது தேவனுடைய வார்த்தையை கைக்கொள்ளுதல் ஆகும். இதேபோல், மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசித்து இரத்தத்தைப் பானம்பண்ணுதல், அதாவது தேவனுடைய வார்த்தைதானே மனிதருக்கு நித்திய ஜீவனளிக்கும் தண்ணீராகிறது.

தண்ணீர் எப்படி தாகத்தை தணித்து எல்லாவற்றிற்கும் ஜீவனைக் கொடுக்கின்றதோ அது போல அசுத்தத்தையும் கறைகளையும் கழுவுகின்றது. ஆவிக்குரிய ரீதியில், தண்ணீர் அதாவது தேவனுடைய வார்த்தை பாவக் கறைகளைக் கழுவி நித்திய ஜீவனை நமக்குத் தருகின்றது. எப்படியிருந்தாலும், நமக்கு முன்பாக தண்ணீர் இருந்தும், நாம் நாம் அதைப் பருகாவிட்டால் நம்முடைய தாகம் தணிக்கப்படாது. நமக்குப் போதுமான தண்ணீர் இருந்தும், நாம் தண்ணீரால் கழுவவில்லை என்றால், நாம் சுத்திகரிக்கப்பட முடியாது. அது போல, தேவனுடைய வார்த்தையை அறிந்து நித்திய ஜீவனை கொண்டிருந்தாலும், நாம் அதை காத்துக்கொள்ளாவிட்டால் அதினால் பிரயோஜனம் ஒன்றுமில்லை.

செய்யாதே அல்லது சிலவற்றை அகற்ற வேண்டும் என்று கூறுவதுபோல நாம் வெறுப்பு, பொறாமை, நியாயந்தீர்த்தல் மற்றும் குற்றஞ்சாட்டுதல் போன்ற பொய்யான குணாதிசயங்களை நாம் நம்முடைய இருதயங்களிலிருந்து அகற்றும்போது நம்முடைய இருதயங்கள் சுத்தமாக்கும். மேலும், நாம் செய் மற்றும் கைக்கொள் என்று நமக்குச் சொல்கிற வார்த்தைகளுக்கு கீழ்படிந்து நாம் நேசித்து, சேவித்து மற்றவர்களுடைய ஆதாயத்தை தேடுவோமானால் நம்முடைய இருதயங்கள் சத்தியத்தால் நிரப்பப்படும். ஆகவே, "ஜலத்தினால் மறுபடியும் பிறத்தல்" என்பது சத்தியமற்ற காரியங்களைக் களைந்துப் போட்டு தேவனுடைய வார்த்தையாகிய சத்தியத்தால் நிரம்பியிருத்தல் என்பதாகும்.

## 3. ஆவியினால் மறுபடியும் பிறத்தல் என்பதின் ஆவிக்குரிய அர்த்தம்

தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளுடைய இருதயங்களில் வந்து அவர்கள் பரிபூரண இரட்சிப்படைய உதவி செய்கிறார்.

யோவான் 15:26 குறிப்பிடுகிறது, "பிதாவானிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக் குறித்துச் சாட்சிகொடுப்பார். சொல்லப்பட்டபடி, தேவன் இரட்சிக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்குப் பரிசுத்த ஆவியை ஈவாக கொடுத்திருக்கிறார் (அப்போஸ்தலர் 2:38). நாம் பரிசுத்த ஆவியைப் பெறும்போது, நமது மரித்த ஆவிகளை உயிர்ப்பித்து நாம் உண்மையாய் நம்பக்கூடிய ஆவிக்குரிய விசுவாசத்தைப் பெறுகிறோம்.

1 யோவான் 5:5–8 சொல்கிறது, "இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்? இயேசுகிறிஸ்துவாகிய இவரே ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர். ஆவியானவர் சத்தியமாகையால், ஆவியானவரே சாட்சி கொடுக்கிறவர் (பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்; பூலோகத்திலே) சாட்சியிடுகிறவைகள் மூன்று, ஆவி, ஜலம், இரத்தம் என்பவைகளே, இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது."

இங்கு "இவரே ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர்" என்பது இயேசுகிறிஸ்துவை குறிக்கிறது. காரணம், அவர்தான் ஜலமாயிருந்த வார்த்தை, அவர் மாம்சமாகி, இந்த பூமிக்கு வந்து தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தைச் சிந்தினார். இயேசு சிலுவையிலே நமக்காக மரித்தபடியால், நாம் அவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தின் வல்லமையால் இரட்சிப்பைப் பெறுகிறோம். மேலும், அவரது பரமேறுதலுக்குப் பின்னர் அவர் நமக்கு அனுப்பிய பரிசுத்த ஆவியானவர் நாம் அதை உறுதியாய் விசுவாசிக்க உதவி செய்கிறார்.

இயேசு தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறவனேயல்லாமல் உலகத்தை ஜெயிப்பவன் யார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது நாம் உலகத்திலிருக்கிற மக்களுக்கு விரோதமாக சண்டைப் போடுவோம் என்ற அர்த்தம் அல்ல, இதன் அர்த்தம் நாம் இவ்வுலகத்தின் இச்சைகள் மேலே சண்டை பண்ணி ஜெயம் பெற்று பாவத்தால் கறைபடாதிருப்பதே. பரிசுத்த ஆவியானவர் நாம் தைரியமாய் ஆண்டவரில் விசுவாசிப்பதற்கு மாத்திரம் அல்ல, நாம் பாவம், நீதி மற்றும் நியாயத்தீர்ப்பையும் உணர்ந்துக் கொள்ள பெலனும் தருகிறார்.

நாம் சத்தியத்திற்குரிய ஆவிக்குரிய மனிதர்களாகும்படி பரிசுத்த ஆவியானவர் நம்முடைய இருதயங்களில் வந்து மரித்த நம்முடைய ஆவிகளை உயிர்ப்பித்து, நாம் சத்தியத்தை அறிந்துணர்ந்து பாவங்களை களைந்துப்போட உதவுகிறார். பரிசுத்த ஆவியானவரால் மட்டுமே நம்முடைய மரித்த ஆவிகள் உயிரடைய முடியும். அவருடைய உதவியால் மட்டுமே நாம் பாவங்களை களைந்துப் போட்டு ஆவிக்குரிய மனிதர்களாக முடியும்.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே நாம் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஜலத்தினாலும் ஆவியினாலும் மறுபடியும் பிறக்கும்போது மட்டுமே நாம் தேவனுடைய ராஜ்யத்தைக் காண முடியும். இங்கு தேவனுடைய அன்பு மட்டுமே நாம் ஜலத்தினாலும் ஆவியினாலும் மறுபடியும் பிறந்து நித்திய ஜீவனை சுதந்தரிக்கச் செய்கிறது. இது அவர் நமக்காக தந்த இலவச வெகுமதி (எபேசியர் 2:8).

நீங்கள் மறுபடியும் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்கவும் அவர் உங்களில் உள்ள ஆவியை பிறப்பிக்கவும் பாவங்களையும் தீமைகளையும் களைந்துப்போட்டு உண்மையுள்ள இருதயங்களை அடையவும் ஊக்கப்படுத்துகிறேன். இப்படிச் செய்வதால் பரலோகத்தில் உள்ள புது எருசேலமை நீங்கள் பற்றிக்கொள்ளும்படியாக ஆண்டவருடைய நாமத்தில் நான் ஜெபிக்கிறேன்.

### விசுவாசத்தின் அறிக்கை

1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.
2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்
3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.
4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.
5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை "அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.

"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]..." [அப். 17;25]

"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" [அப். 4;12]

## “நான் கொழுப்பு கல்லீரல் மற்றும் குடல் புற்றுநோயிலிருந்து சுகம் பெற்றேன்”

சகோதரர் யூசுக் லீ, வயது 19, மாணவர் ஞாயிறு பள்ளி, தென்கொரியா



டிசம்பர் 11, 2014 அன்று, எனக்கு வயிற்றாலை மற்றும் வயிற்றுக் கடுப்பு இருந்தது. அதனால் நான் அருகாமையில் இருந்த மருத்துவமனை ஒன்றிற்கு சென்றேன். நான் பையாப்சி, எண்டோஸ்கோப்பி, சிறுநீர் பரிசோதனை மற்றும் இரத்தப் பரிசோதனை எடுத்தேன். மருத்துவர் அது க்ரோன் வியாதி எனும் ஒரு வகையான வீக்கமுண்டாக்குகிற ஆசனநோய் என்று ஆட்சேபித்து, மற்றுமொரு பெரிய மருத்துவமனைக்கு என்னைப் போகச் சொன்னார்.

டிசம்பர் 23 அன்று, சீயோல் தேசிய பல்கலைக்கழக மருத்துவமனையில் மறுபரிசோதனை நான் எடுத்துக் கொண்டேன். பரிசோதனை முடிவு எனக்கு கொழுப்புக் கல்லீரல் மற்றும் குடல் புற்றுநோய் இருந்ததென காண்பித்தது. நான் ஜெபமையத்தின் தலைவி திருமதி போக்நிம் லீ அவர்களிடம் ஆலோசனை பெற்றுக் கொண்டேன். காலை 30 நிமிடங்களும், மாலை ஒரு மணி நேரமாக 70 நாள் பொருத்தனை ஜெபத்தைத் துவங்கினேன். மேலும் நாம் அறிவர். ஜேராக் லீ அவர்களது பிரசங்கமான 'ஆவி, ஆத்துமா, சரீரம்' என்பதை குறிப்பெடுத்து வாசிக்கவும் செய்தேன். அதே வேளையில், ஆண்டவருடைய அன்பு என்னிடத்தில் வந்து என் இதயத்தைத் தொட்டது. எனக்கு விசுவாசம் அருளப்பட்டது. நன்றிகள் செலுத்தினேன்.

என் தாய் கண்காணியை க்யுங்மீ லீ கூட மான்மின் ஜெப மையத்தில் காலையும் மாலையும் நடைப்பெற்ற கூட்டங்களில் பங்குப் பெற்றார். அவர்கள் தானியேல் ஜெபக் கூடுகைகளிலும் ஜெபித்தார்கள். அவர்கள் விசுவாசத்தில் வெதுவெதுப்பாய் இருந்ததற்காக மனந்திரும்பினார்கள். தேவனுடைய கிருபையில் நான் தேறிக் கொண்டு இருந்தேன். பிப்ரவரி 19, 2015ல் தலைமை போதகருடைய ஜெபத்தைப் பெற்ற பின், எனது நிலை தீவிரமாக முன்னேறியது. நான் நன்றாக ஜீரணிக்க ஆரம்பித்தேன். நன்றாக சாப்பிட்டேன்; வயிற்றாலை இல்லை.

மார்ச் மாதத்தில் சீயோல் தேசிய பல்கலைக் கழக மருத்துவமனையில் மீண்டும் பையாப்ஸி, எண்டோஸ்கோப்பி, சிறுநீர் பரிசோதனை மற்றும் இரத்தப் பரிசோதனையை எடுத்தேன். அவை அனைத்துமே நான் இயல்பாகி விட்டேன் என்று காண்பித்தது. ஹலேலூயா!

## “கைக்குட்டை ஜெபத்தால், எனது சிறுநீரக கல் வெளியே வந்தது!”

கண்காணி க்யோசியோன் ஜின், வயது 52, மாகாணம் 10, தென்கொரியா



மார்ச் 5, 2015 அன்று, என்னுடைய அடிவயிற்றில் பயங்கர வலி ஏற்பட்டது. நான் வாந்தியும் எடுத்தேன். நான் தானியங்கி முறைமையில் பதிலளிக்கும்படி பதிவு செய்யப்பட்டிருந்த தலைமை போதகரின் ஜெபத்தைப் பெற்றேன் (822–830–5320), அதன் பின்னர் வேதனை மறைந்தது. அடுத்த நாள் காலையில், பயங்கரவலி திரும்பவும் வந்தது. மாலை 6 மணிக்கு என்னை அவசர ஊர்தி மூலமாக மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு அழைத்துச் சென்றார்கள்.

பரிசோதனைக்காக காத்திருக்கையில், நான் எனது மாகாணப் போதகர் டால்சியோன் லீ அவர்களிடமிருந்து கைக்குட்டை ஜெபத்தை (குறிப்பு. அப்போஸ்தலர் 19:11–12) என் மனைவி மூத்த கண்காணியை மின்ஹோரீயு அவர்களுடைய உதவியால் பெற்றுக்கொண்டேன். பின் பயங்கரமான வலி மறைந்தது. எனது CT ஸ்கேன் 4 மி.மீ அளவு பெரிய கல் எனது சிறுநீரக பாதையின் முடிவில் இருப்பதை வெளிப்படுத்தியது. விளைவைப் பார்த்த பின்னர் நான் வீடு திரும்பி மூவான் மதுர தண்ணீரை பருகினேன். சற்று நேரத்திற்குப் பின் நான் கழிப்பறைக்குச் சென்றேன். பின்பு என்னுடைய சிறுநீரில் அந்தக் கல்லானது வெளியேறியதை நான் கண்டேன். ஹலேலூயா!





◀ 4 மி.மீ அளவு பெரிய சிறுநீரக கல்

## “நான் நல்ல கண் பார்வையை திரும்ப பெற்று ஆவிக்குரிய பார்வையையும் பெற்றேன்”

சகோதரி டையானா மோரேனோ, வயது 18, கொலம்பியா மான்மின் சபை



2010 முதல் ஐந்து வருடங்களாக நான் மிகவும் கிட்டப்பார்வை உள்ளவள்; தூரத்தில் உள்ள பொருட்களை என்னால் பார்க்க இயலாது. ஆசிரியர்கள் கரும்பலகைகளில் எழுதியவை எனக்கு மங்கலாக தெரிந்தது. ஜனவரி 2013ல், நான் எனது பெற்றோர்களுடன் கொலம்பியா மான்மின் சபையில் பங்குப்பெற ஆரம்பித்தேன்.

நாங்கள் மான்மின் மத்திய திருச்சபையின் ஞாயிறு ஆராதனைகளில் GCN தொலைத்தொடர்பு வழியாக பங்குப் பெற்றோம். நான் தலைமை போதகர் அறிவர்.ஜேராக் லீ அவர்களுது செய்திகளிலிருந்து அதிக கிருபையைப் பெற்றேன். அவர் நாம் ஆசீர்வாதத்தை பெற வேண்டும் என்று மட்டும் வலியுறுத்தாமல், ஆசீர்வாதங்களுக்கான திறவு கோல்களை அறிமுகம் செய்தார். அது தான் இருதய சுத்திகரிப்பு. நான் அசைக்கப்பட்டு களிப்பானேன். ஆனால் தொலைக்காட்சி திரையைப் பார்க்கும்பொழுதெல்லாம் என் கண்கள் குத்தும். அதனால் பிரசங்கம் கேட்பது எனக்கு கடினமாயிருந்தது.

ஏப்ரல் 2014ல், தென் கொரியாவிலிருந்து உயர்திரு. ஹிசன் லீ அவர்கள் கொலம்பியா மான்மின் சபையின் 2வது ஆண்டுவிழா ஆராதனைக்கு வந்து கைக்குட்டை சுகமளிக்கம் கூட்டத்தை நடத்தினார். தலைமை போதகர் ஜெபித்த கைக்குட்டையை வைத்து அவர்கள் ஜெபித்த போது (அப்போஸ்தலர் 19:11–12) எனது சரீரம் முழுவதும் சூடாகி, எனது கண்கள் ஒளி பெற்றது. என் கண்களை நான் திறந்த பொழுது தூரத்தில் இருந்த பொருட்கள் தெளிவாக தெரிந்தன. அது மகா ஆச்சர்யம். **நான் சிறந்த பார்வையை பெற்றதால் எல்லாவற்றையும் தெளிவாகப் பார்க்கலானேன். மேலும், தேவன் நான் ஆவிக்குரிய உலகத்தைப் பார்ப்பதற்கேதுவாக எனது ஆவிக்குரிய கண்களை தலைமை போதகருடைய “பரலோகம்” மற்றும் “நரகம்” என்ற புத்தகங்களின் மூலமாக திறந்தார்.**

**எல்லா நன்றிகளையும் தேவனே உமக்கே நான் ஏறெடுக்கிறேன். எங்கள் சபையின் கலைநிகழ்ச்சி குழுவில் ஓர் அங்கத்தினராக நான் தேவனை துதித்துப் பரலோகத்திற்கான நம்பிக்கையோடு இருக்கிறேன். ஹலேலூயா!**

## “வல்லமை” என்ற DVDயை பார்த்துக் கொண்டிருக்கும்போது தேவனுடைய சுகமாகுதலின் கிரியையை அனுபவித்தேன்”

சத்திய பிரகாஷ் சர்மா, வயது 50, டெல்லி மான்மின் சபை, இந்தியா

**டிசம்பர் 2014லிருந்து மூட்டு வாதத்தால் ஏற்பட்ட பயங்கரமான வலியால் என்னால் சரியாக நடக்க முடியவில்லை. எனது மனைவி சுமலேஷ்ம்கூட தண்டுவட கட்டியால் இடுப்புக்கு கீழே முடக்குவாதம் வந்த காரணத்தால் சக்கர நாற்காலியை சார்ந்திருந்தாள்.**

**பிப்ரவரி 2015ல், எனது இரண்டாவது மகள் நேகா சர்மா சில புத்தகங்களையும் ஒரு DVDயையும் டெல்லி உலக புத்தக கண்காட்சி 2015லிருந்து வாங்கி வந்தாள். அப்புத்தகங்கள் அறிவர். ஜேராக் லீ அவர்களது, *சிலுவையின் செய்தி, விசுவாசத்தின் அளவு, ஏழு சபைகள், விழித்திருந்து ஜெபியுங்கள்* போன்றவையாகும்.** அந்த DVD 'வல்லமை' என்ற தலைப்பிடப்பட்டிருந்தது.

நாங்கள் மற்ற சபைகளில் பங்குப் பெற்று தேவனுடைய வார்த்தையிலும் அவருடைய சுகமாகுதலின் கிரியைகளிலும் அதிக ஆர்வம் கொண்டிருந்தோம். அதனால் நாங்கள் அப்புத்தகங்களை வாசித்து மாபெரும் கிருபையை பெற்றோம். நாங்கள் DVDயிலும் சாட்சியைக் கண்டோம். தேவனுடைய கிரியைகளால் நாங்கள் ஆச்சர்யப்பட்டு பரிசுத்த ஆவியால் நிரம்பினோம். நான் மகிழ்ச்சியால் நிறைய என் சரீரம் நடுங்கியது. அதன்பின் என் மூட்டிலிருந்த வலி போய்விட்டது! ஹலேலூயா!

அச்சமயம் மருத்துவமனையில் மருத்துவரோடு ஒரு முன்னேற்பாடு எனக்கு இருந்தது. நான் பரிபூரணமாய் குணமானபடியால் அங்குச் செல்ல வேண்டிய அவசியமில்லாமல் போயிற்று. மார்ச் 8 அன்று, என் குடும்பத்தினர் அனைவரும் டெல்லி மான்மின் சபையில் சென்று பதிவு செய்தோம். பின்னதாக, என் மனைவி 'வல்லமை' DVDயை பார்த்துக் கொண்டிருக்க, அவளது முடமான கால்களில் உணர்வை உணர்ந்தாள். அது மிக அற்புதம்! அவளது பிரச்சனையிலிருந்து அவள் சுகத்தைப் பெற்றுக்கொண்டதால் என் குடும்ப அங்கத்தினர்கள் நம்பிக்கையை பெற்றுக்கொண்டோம். ஜீவனுள்ள தேவனுக்கு நான் எல்லா நன்றியையும் செலுத்துகிறேன்.



## “என்னை 20 ஆண்டுகளாக கஷ்டப்படுத்திய மூக்கு கோளாரிலிருந்து சுகம் பெற்றேன்”

கண்காணி. ச்சியோல்ஜின் கிம், வயது 56, க்வாங்ஜூ மான்மின் திருச்சபை, தென்கொரியா



செப்டம்பர் 2007ல் நான் எனது அருகில் வசிக்கும் ஒருவரால் க்வாங்ஜூ மான்மின் திருச்சபையின் ஞாயிறு ஆராதனைகளுக்கு வழி நடத்தப்பட்டேன். அந்நாட்களில் நான் மயக்கத்தினாலும் மூக்கு கோளாரினாலும் மிகவும் கஷ்டப்பட்டேன். குறிப்பாக, மூக்கு கோளாரு 20 ஆண்டுகளாக என்னை கஷ்டப்படுத்தியது. நான் அதிகமாக மது அருந்தி புகைப்பிடித்தேன்.

நான் பங்குப்பெற்ற முதல் நாளிலே, மான்மின் மத்திய திருச்சபையின் தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்கள் 'பரலோகம்' என்ற தலைப்பில் பிரசங்கம் கொடுத்தார். எங்கள் சபை அங்கத்தினர்கள் மத்திய **திருச்சபையின் ஆராதனைகளில் GCN மூலமாக இணைந்தனர். பரலோகத்தைக் குறித்து கேள்விப்பட்டது அதுவே எனக்கு முதல் முறையாக இருந்தது. நான் புதிய உலகத்தில் இருப்பதுபோல உணர்ந்தேன். மகிழ்ச்சி என் இருதயத்திலிருந்து பொங்கி வழிந்தது. நான் அறிவர். லீ அவர்களது சாட்சியின் நினைவுகளான *மரணத்திற்கு முன் நித்திய வாழ்வை ருசித்தல்* என்பதை வாசித்து அதிகமாய் கண்ணீர் சிந்தினேன்.**

**ஒரு வாரத்திற்கு பின்னதாக, நான் மது அருந்துவதையும் புகைப்பிடிப்பதையும் நிறுத்த முடிந்தது. மூன்று வாரங்களுக்குப் பின்னர் நான் அறிவர். லீ அவர்களது** ஜெபத்தால் மூக்கு கோளாரு, ஐந்து ஆண்டுகளாக இருந்த மயக்கம் மற்றும் கடந்த மூன்று வருடங்களாக இருந்த உயர் இரத்த அழுத்தம் போன்ற அனைத்திலிருந்தும் சுகம் பெற்றேன். ஹலேலூயா! இப்போது நான் ஆண்டவருடைய பணியாளராக மாறியுள்ளேன்.

நான் குழு தலைவராகவும், செல் தலைவராகவும், மாணவர்களுக்கு பொருளாதார உதவி ஆதரவாளராகவும் பணிபுரிந்து, தன்னார்வமாக சபை வாகன ஓட்டுனராகவும் பணிபுரிகிறேன். என்னை ஆசீர்வாதமான வாழ்வு நடத்தவும், என் சபையை சேவிக்கவும் வழிநடத்திய ஆண்டவருக்கு என் நன்றியை செலுத்துகிறேன்.

# தேவனால் எல்லாம் கூடும்

அன்பின் தேவன் எல்லா மனிதர்களும் இரட்சிப்பை பெற விரும்புகிறார். அவர் அற்புதங்கள், அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் வல்லமையான கிரியைகளை நடப்பித்து அதன்மூலம் அவரால் கூடாதது ஒன்றுமில்லை என்பதை காண்பிக்க விரும்புகிறார். அவருடைய வல்லமையை அனுபவித்த விசுவாசிகளுடைய சாட்சிகளை நாம் கேட்போம்.

## “ஜெபத்திற்குப் பிறகு என்னுடைய பேத்தி நடக்க ஆரம்பித்திருக்கிறாள்”

சகோதரி நரண்டொயா, வயது 57, மங்கோலியா மான்மின் சபை



நான் என்னுடைய இரண்டாவது மகளுடன் வசித்துக் கொண்டு வருகிறேன். பிப்ரவரி 2013ல், என்னுடைய பேத்தி பிறந்தாள். அவள் பிறந்து இரண்டு வருடங்களாகியும் அவள் இன்னும் நடக்காதவளாய் இருந்தாள். அவள் வயது பிள்ளைகளெல்லாம் நடந்தனர், ஆனால் அவளோ நடக்கவில்லை. நாங்கள் அதைக் குறித்து அதிக கவலைப்பட்டோம்.

ஆகவே அவளை ஒரு மருத்துவமனைக்கு பரிசோதனைக்கு கொண்டு சென்றோம். மருத்துவர் அவளுடைய இடுப்பு எலும்பு சரியாக வளராததே அவள் நடக்க முடியாததற்கு காரணம் என்று கூறினார். அவள் தன்னுடைய கால்களை நிலையாக வைக்க ஒரு பாதுகாப்பு கவசத்தை (பெல்ட்) அணிந்துகொள்ள வேண்டும் என்று அவர் எங்களிடம் கூறினார். மேலும் அவள் ஏறக்குறைய நான்கு மாதங்களுக்கு குறிப்பிட்ட மருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் சொன்னார்.

ஒரு நாள், எனக்கு அறிமுகமான கண்காணியை நண்சல்மா என்னுடைய பேத்தியை கண்டு வருத்தமடைந்தாள். அவள் நாங்கள் சபைக்குச் சென்று, நல்லதொரு கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்ந்து, பிறகு ஜெபத்தைப் பெற்றுக்கொண்டால் என் பேத்தி சுகமாக முடியும் என்று கூறினாள்.

நான் மங்கோலியா மான்மின் சபையில் பதிவு செய்து, ஆர்வமாக பங்குபெற்றேன். நான் கர்த்தருடைய நாளை கடைபிடித்து, தசமபாகத்தை கொடுத்தேன்; நான் தானியேல் ஜெபக்கூட்டத்திலும்கூட பங்கேற்க முயற்சித்தேன். நாங்கள் இரண்டு மாதங்களாக அவளுக்கு கொடுத்து வந்த மருந்துகளை கொடுக்காமல் நிறுத்தினோம். நான் அவளுக்காக ஆராதனை வேளையில் அறிவர். ஜேராக் லீ அவர்களுடைய ஜெபத்தை ஊக்கத்தோடு பெற்றுக் கொண்டேன். மேலும் நான் அவளுடைய கால்களில் மூவான் மதுர தண்ணீரை தொடர்ச்சியாக தெளித்துக் கொண்டு வந்தேன் (யாத்திராகமம் 15:25).

அவள் கைக்குட்டை ஜெபத்தை (அப். 19:11–12) பெற்றுக் கொண்ட பிறகு, அவளுடைய நிலைமை வேகமாக சரியானது. முடிவாக, அக்டோபர் 2014 முதல் அவள் நடக்க ஆரம்பித்தாள். மார்ச் 2015 முதல் அவள் பாதுகாப்பு கவசம் இல்லாமல் தானாகவே நடக்கிறாள். ஹலேலூயா!




## “எனது செவிடான இடது காது கேட்கிறது”

கண்காணியை சுனோக் பார்க், வயது 67, 7வது மாகாணம், தென்கொரியா



திருமணத்திற்கு பிறகு, நான் என்னுடைய கணவனால் அடிக்கப்பட்டதால் என்னுடைய இடது காது சவ்வு கிழிந்துபோனது. நான் எப்பொழுதும் இரணத்தினாலும், சீல் வடிதலாலும், தலைவலியாலும் அவதிப்பட்டேன். என்னுடைய குடும்பத்தின் பொருளாதார நெருக்கடியின்நிமித்தம் நான் மருத்துவமனைக்கு போகவில்லை. முடிவில், என்னுடைய இடது காது கேட்கும்திறனை இழந்தது.

ஆனால் நம்முடைய சபைக்கு வரத்தொடங்கிய பிறகு என்னுடைய இடது காதில் மூவான் மதுர தண்ணீரை தடவினேன். அதன்பிறகு சீல் வடிதல் நின்றது, தலைவலியும் குறைந்தது. டிசம்பர் 31, 2014 முதற்கொண்டு நான் மூன்று நாட்கள் உபவாசம் இருந்தேன். என்னுடைய இருதய விருப்பத்தோடு, நான் புது வருட ஆராதனைக்கு முன்பு தலைமை போதகரிடம் கரம் கொடுத்தேன். ஆராதனைக்கு பிறகு நான் வீட்டிற்கு வந்தேன்; நான் வாந்தி எடுத்தேன்; நான்கு முறை வயிற்றுப்போக்கு ஏற்பட்டு, பிறகு அசந்து தூக்கி விட்டேன். காலையிலே, நான் மிகவும் நன்றாக இருப்பதை உணர்ந்தேன். என்னுடைய தலைவலியும்கூட முற்றிலுமாய் மறைந்து போனது.

ஒரு சில நாட்கள் பிறகு, என் இடது காதில் ஏதோ கடினமான ஒன்று நகர்வதைப் போன்று உணர்ந்தேன். அதை எடுத்தபோது, அது கெட்டியான இரத்தமாய் இருந்தது. அடுத்த இரண்டு மூன்று நாட்களுக்கு, என்னுடைய இடது காதில் நான் பெருஞ்சத்தம் போன்ற இரைச்சலை கேட்க முடிந்தது. என்னுடைய இடது காதில் ஏதோ ஒன்று இல்லாததுபோல உணர்ந்ததால், நான் காதுகேள் கருவி (Earphones) மூலம் பிரசங்கங்களை கேட்க முயற்சித்தேன். அதன்பிறகு, அந்த பெருஞ்சத்தம் போன்ற இரைச்சல் மறைந்தது, நான் இதமாக உணர்ந்தேன். அன்று முதல் என்னால் கேட்க முடிகிறது. ஹலேலூயா!

அவளுடைய செவிடான இடது காதிலிருந்து இரத்தக் கட்டி வெளியே வந்ததால், அவள் சில நாட்களுக்கு இரைச்சல் போன்ற சத்தத்தை கேட்டாள். பிறகு அவள் கேட்க ஆரம்பித்தாள்.




▲ அவளது செவிடான இடது காதிலிருந்து இரத்தக் கட்டி வெளியேறியது. அவள் சில நாட்களுக்கு இரைச்சல் போன்ற சத்தத்தை கேட்டாள். பிறகு அவள் கேட்க ஆரம்பித்தாள். படத்தில் இரத்தக்கட்டியை பார்க்கிறீர்கள்

## “வல்லமையான ஜெபத்தால் என்னுடைய சிற்றிடை கருத்தரிப்பு இயல்பானது”

கண்காணியை க்யங்மி லீ, வயது 36, 32வது மாகாணம், தென்கொரியா



ஏப்ரல் 2, 2015 அன்று, நான் கர்ப்பமாய் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நான் பெண்கள் மருத்துவமனைக்குச் சென்றேன். ஆனால் எதிர்பாராத விதமாக, எனக்கு சிற்றிடை கருத்தரிப்பு (Interstitial Pregnancy) என்னும் வியாதி இருப்பதாக சொன்னார்கள் (கருப்பையினுள் சாதாரணமாக கர்ப்பம் உருவாகும் இடத்தில் கரு உருவாகாமல், அதற்கு வெளிப்புற பகுதியில் உருவாகும் நிலை). நான் பெரிய மருத்துவமனைக்கு செல்லும்படியாக அறிவுறுத்தப்பட்டேன்.

அடுத்த நாள், நான் பல்கலைக்கழக மருத்துவமனைக்குச் சென்றேன். அங்கும் பரிசோதனையின் முடிவு ஒரே மாதிரியாகவே இருந்தது. கருவுற்ற முட்டையானது எண்ணற்ற இரத்த நாளங்கள் இருந்த பகுதியில் அமைந்திருந்தது. அவ்விடத்தில் இரண்டு லிட்டர் இரத்தம் அடைப்பட்டிருந்தது. கருக்கலைப்பு மட்டுமே ஒரே வழி, இல்லையேல் என் வாழ்க்கை அச்சுறுத்தலாகிவிடும் என்று என்னுடைய மருத்துவர் சொல்லிவிட்டார்.

என்னுடைய கணவர் ஜங்டே யுன்–னும், நானும் விசுவாசத்தினால் சுகத்தைப் பெறலாம் என்று எண்ணி வீட்டிற்கு வந்துவிட்டோம். நான் நல்ல ஒரு செல் குழு தலைவராக இல்லாததற்காகவும், என்னுடைய குடும்பத்தில் சமாதானத்தை உடைத்ததற்காகவும் தேவனுக்கு முன்பாக நான் மனந்திரும்பினேன். அதன்பிறகு ஒரு வெள்ளிக்கிழமை முழு–இரவு ஆராதனைக்கு முன்னதாக நான் அறிவர். ஜேராக் லீ அவர்களுடைய ஜெபத்தைப் பெற்றுக்கொண்டேன்.

அந்த நேரத்தில், முன்பு எனக்கு வலி இருந்த வயிற்றுப் பகுதியானது மென்மையாய் மாறியிருப்பதைப் போன்று உணர்ந்தேன். நான் மிகவும் சௌகரியமாக உணர்ந்தேன், எனினும் எனக்கு இரத்தப்போக்கு ஏற்பட தொடங்கிற்று. நான்கு நாட்களுக்குப் பிறகு மீண்டும் நான் பரிசோதித்தபோது, என்னுடைய சிசு என் கருப்பையிலே இணைந்தாக பரிசோதனை முடிவு இருந்தது. அடைபட்டிருந்த இரத்தம் இரத்தப்போக்காய் வெளியேறியது, எனவே இனி எதைக் குறித்தும் கவலைப்பட அவசியமில்லை. ஹலேலூயா!

இந்த ஆச்சரியமான கிரியை அனுபவித்த பிறகு என்னுடைய கணவர் ஐந்து நாட்களாக தொடர்ந்து ஜெபிக்க ஆரம்பித்தார்; தேவனுடைய அன்புக்கும், கிருபைக்கும் அவர் நன்றி செலுத்துகிறார். நாங்கள் சகல நன்றிகளையும், மகிமையையும் தேவனுக்கே செலுத்துகிறோம்.



▲ ஜெபத்திற்கு பிறகு, இரத்த வீக்கமானது முற்றிலும் நீங்கி, சிசுவானது அவளுடைய கருப்பையிலே இணைந்தது.

GCN
Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS
Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

